# திருக்குறளில் கிறித்துவ அறம்

*முனைவர் இரா. சு. கிளாரா தேவகிருபா*
விரிவுரையாளர், தமிழ்த்துறை
போப் கல்லூரி, சாயர்புரம்

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6417

உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் திருக்குறளும் கிறித்தவச் சமயப் புனித நூலான விவிலியமும் சமுதாயத்தில் மக்கள் எவ்வாறு நடக்க வேண்டுமென்ற அறக்கருத்துக்களை மிகவும் தெளிவாக எடுத்துரைக்கின்றன. திருக்குறளையும், திருவிலியத்தையும் ஒப்பிட்டு ஆராய்ந்தால் அவை கூறும் அனைத்து அறங்களுக்கும் இடையே அழுத்தமான ஆழமான ஒற்றுமை இருப்பதை உணரமுடியும். இனம், சமயம், மொழி கடந்து மனிதகுல மேம்பாட்டிற்கு நெறி காட்டும் ஒப்புயர்வற்ற நூல்களாகும்.

**"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு (423)**

என்ற குறளுக்கேற்ப இந்நூற்கள் கூறும் அறங்களை மக்கள் கற்பது மட்டுமல்ல அவ்வறங்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

### அறம் பற்றிய விளக்கம்

அறம் என்றும் சொல்லின் பொருள் நெகிழ்ச்சித்தன்மை உடையதாகும். ஒழுக்கத்தைப் போதிப்பது அறம் மனிதனை மனித நேயத்தோடு வாழ் வழி காட்டுவது அற நெறியாகும். மனிதனுடைய நடத்தையின் நன்மை தீமைகளை ஆய்வதே தமிழில் அறவியல் எனப்படும். நம்முடைய முன்னோர்கள் அறம் என்ற சொல்லிற்குத் தந்துள்ள விளக்கத்தோடு எதிக்ஸ் (Ethics) என்றும் ஆங்கிலச் சொல்லிற்குத் தரப்படும் பொருள் விளக்கம் மிகவும் பொருந்துவதாக இருக்கிறது. அறம் பற்றித் திருவள்ளுவர் இவ்வாறு கூறுகிறார்.

**"அழுக்காறு அவா, வெகுளி, இன்னாச் சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்"**

என குறள் மூலம் திருவள்ளுவர் அறத்திற்கு விளக்கம் தந்துள்ளார்.

### இரு நூற்கள் கூறும் அறங்கள்

இவ்விரண்டு அறநூல்களும் சமுதாயம் நெறிமுயையில் வாழ வழி காட்டுகின்றன. அன்புடைமை, ஈகை, செய்நன்றியறிதல், அடக்க முடைமை, கொலை, இன்னா செய்யாமை போன்ற அறங்களை குறித்து இரு நூல்களும் கூறும் கருத்துகளை தொகுத்துக் காண்போம்.

**அன்புடைமை**

அன்பு மனிதனுக்கு இருக்க வேண்டியப பண்பு. அன்பு பற்றிப் பேசாத அறநூல்கள் இல்லை. "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்கிறது திருக்குறள் உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறரிடத்திலும் அன்பு கூறுவாயாக என்கிறது திருவிவிலியம்.

**"அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு" – குறள் 72**

என்று விளக்குகிறார். உலக மக்கள் அனைவரும் அன்பு என்றும் வகையில் அகப்பட்டு வந்தால் இவ்வுலகம் இன்புற்று சிறக்கும்.

**ஈகை**

மனிதர்கள் அனைவரும் கைக்கொள்ள வேண்டிய அறங்கள் ஒன்று அன்பு மற்றொன்று ஈகை. ஈகையைப் பற்றி இறைவன் கூறும்போது "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான் (நீதி: 19:17) அன்பால் அகிலத்தை வெல்லலாம் ஈகையால் இறைவனிடம் சேரலாம். நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள் என்று விவிலியம் கூறுகிறது.

**திருக்குறளில் ஈகை**

இல்லாவர்க்குப் பொருள் கொடுத்தலே ஈகை எனப்படும் இதனைத் திருவள்ளுவர்

**"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர் துடைத்து**
***(குறள் 221)***

பொருளைக் கொடுத்து உதவுவதே ஈகை. பொருள் இல்லா ஏழையின் கொடும் பசியைப் போக்க வேண்டும். இதனை திருவள்ளுவர் இங்ஙனம் குறிப்பிடுகிறார்

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள் வைப்புழி"**
***(குறள் 226)***

**செய்ந்நன்றி அறிதல்**

செய்ந்நன்றி அறிதல் என்ற சொற்றொடர் ஒருவர் செய்த உதவியை மறவாமை என்பது பொருளாகும். பிறர் செய்த உதவியை மறவாதிருக்க வேண்டும் என்றும் உயரிய வாழ்க்கை நெறியினை திருக்குறளில் காணலாம்.

**"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மானப் பெரிது"**
***(குறள் 102)***

அறிந்து செய்த உதவி சிறியதாயினும் அச்சிறு உதவி இவ்வுலகை விடப் பெரியதாக மதிக்கப்படும். பிறர் நமக்கு எந்த உதவியும் செய்யாமல் இருக்கும்போது நாம் பிறருக்குச் செய்யும் உதவியே சிறந்தது இதனை திருவள்ளுவர்.

**"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமம் ஆற்றல் அரிது**
***(குறள் 101)***

**விவிலியத்தில் செய்நன்யறிதல்**

திருவிவிலியத்தில் செய்நன்றியறிதல் மிகவும் சிறப்பாக கூறப்பட்டுள்ளது. இயேசு எருசலேமுதலும் செல்லும் வழியில் பத்து தொழு நோயாளிகள் அவருக்கு எதிர்ப்பட்டனர். இயேசுவே எங்களுக்கு இரங்கும் என்று குரல் எழுப்பினார்கள். அவர் அவர்களைப் பார்த்து நீங்கள் போய் உங்கள் குருக்களிடம் காண்பியுங்கள் அவர்கள் புறப்பட்டுப் போகும்போது அவர்கள் நோய் நீங்கிற்று ஒருவர் மட்டும் இயேசுவிடம் வந்து நன்றி செலுத்தினார். அவர் ஒரு சமாரியர். இந்நிகழ்ச்சி செய்நன்றியறிதலுக்கு மிகச் சிறந்த சான்று. (லூ. 17:11-19) நன்றியற்றவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்று விவிலியம் கூறுகிறது.

**அடக்கமுடைமை**

இவ்வுலகில் மனிதன் பல உடைமைகள் உடையவனாய் இருக்கிறான். திருவள்ளுவர் கூறும் உடைமைகள் மனிதனைப் பண்படுத்துவன

அத்தகைய உடைமைகளுள் ஒன்று அடக்க முடைமை திருக்குறளில் அடக்க முடைமையின் சிறப்பினை தெளி வாக விளக்குகின்றார்.

**"தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு"**

***(குறள் 129)***

தீயினாற் சுட்ட புண் தழும்பியிருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால் தீய சொல்லால் ஏற்பட்ட புண் உள்ளத்திலிருந்து ஆறாது. மனிதன் நாவை அடக்க வேண்டியதின் அவசியத்தை விளக்குகிறார்.

**யாகவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பார் சொல் இழுக்கப்பட்டு**

***(குறள் 127)***

திருவிவிலியத்தில் அடக்கமுடைமை பற்றி சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. திருவிவிலியம் நாவடக்கம் பற்றியும், அதனால் ஏற்படும் தீமைகள் பற்றியும் விளக்கப்படுகிறது.

"தம் வாயையும் நாவையும் காப்பவர் இடுக்கன் வராமல் தம்மைக் காத்துக் கொவார். (நீதி 21:23) ஒருவர் நாவினால் எதை விதைக்கின்றாரோ அதையே உண்பார். சிறிய சுக்கானைக் கொண்டு பெரிய கப்பலை திசை திருப்பலாம். சிறிய நூலின் மூலம் தம் உடல் முழுவதையும் நெறிப்படுத்தலாம். திருக்குறளும் திருவிவிலியமும் அடக்கம் பற்றியும் நாவடக்கம் பற்றியும் சிறப்பான கருத்தை வலியுறுத்துகின்றன.

### கொலை

ஒரு உயிருக்கு இன்னா செய்வது கொலை, உயிரை அழிப்பது கொலை திருவள்ளுவர் கொல்லாமையை இரண்டு அதிகாரங்களில் வலியுறுத்துகின்றார். ஒன்று புலால் மறுத்தல், பிறிதொன்று பகை கொண்டு இன்னொரு உயிரைக் கொல்வது. கொல்லாமை என்றும் அறத்தைக் கடைப்பிடித்து வாழ்பவன். மேல் உயிரைக் கவரும் கூற்றலனும் செல்லமாட்டான்.

**"தன்னுயீர் நீப்பினும் செய்யற்க தான்பிந்து**
**இன்னுயிர் நீக்கும் வினை**

***(குறள்: 327)***

தன் உயிர் உடலை விட்டு நீங்குவதாய் இருந்தாலும் தான் வேறு ஒரு உயிரைப் போக்கும் செயலைச் செய்யக்கூடாது.

### திருவிவிலியத்தில் கொல்லாமை

திருவிவிலியம் காட்டும் அறங்களில் ஒன்று கொல்லாமை கொலை செய்யாதிருப்பாயாக என விவிலியம் மிகவும் தெளி வாக கட்டளையிடுகின்றது. தேவன் படைத்த முதல் மனிதன் ஆதாம், முதல் மனுஷி ஏவாள் இருவரும் இரு குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். ஆபேல் ஆடுகளை மேய்த்தான் காயின் நிலத்தைப் பண்படுத்துபவன்.

ஆபேலின் காணிக்கையை கண்ணோக்கினார் ஆண்டவர் காயினின் காணிக்கையை கண்ணோக்கவில்லை காயின் சினமுற்று ஆபேலைக் கொலை செய்தான். எனவே, கொலை கடவுளின் சாபத்திற்கு நம்மை ஆளாக்குகிறது.

### இன்னா செய்யமை

துன்பம் தரும் செயல்கள் எவை என அறிந்து பிறருக்கு செய்யாதிருக்க வேண்டும். தீமைக்குப் பதிலாக நன்மையே செய்ய வேண்டும் இதனை இரு அற நூல்களிம் காணலாம்.

### திருக்குறளில் இன்னா செய்யாமை

**"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நான**
**நன்னயம் செய்து விடல்**

***(குறள் 314)***

தனக்குத் துன்பம் செய்தவரைத் தண்டித்தல் என்பது அவர் வெட்கம் அடையும்படி அவருக்கு நன்மையான செயல்களைச் செய்ய வேண்டும்.

**"அறிவினான் ஆகுவதுண்டோ பிறதின் நோய்**
**தந்நோய் போல் போற்றாக்கடை**

என்னும் குறட்பா மூலம் வள்ளுவர் இன்னா செய்யாமையின் இலக்கணத்தை கூறுகிறார்.

திருவிவிலியத்தல் இன்னா செய்யாமை விளக்கும் வகையில் பல விளக்கங்கள் காணப்படுகின்றன.

**"தன் குற்றத்தைத் தானே உணருகின்றவன் உண்டோ?**

**என் அறியா பிழைக்காக என்னை மன்னியும்"**

**(நீதி 19:12)**

**தீமை செய்வோர் அனைவரும் வீம்பு பேசுகின்றார் - திருப்பாடல் 94-4**

கிறித்தவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளில் மன்னிப்புத் தலையாய் கொள்கையாகும். இயேசு பெருமான் இதனை உங்களைச் சபிப்போருக்கு ஆசி கூறுங்கள் உங்களை இகழ்ந்து பேசுவருக்காக இறைவனிடம் மன்றாடுங்ள். உங்களை ஒரு கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்.

கிறிஸ்து பெருமானின் வாழ்வில் அவர் பாவங்களை மன்னித்து மட்டுமின்றித் தம்மைச் சிலுவையில் அறைந்து கொடுமைப் படுத்தியவர்களையும் மன்னித்தார். இந்த நிலையைத்தான் கவிஞர் எச்.ஏ கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் தம் நெஞ்சுருகிப் படிப்பார் மனமும் கரைந்துருகுமாறு பாடியுள்ளார்.

**"தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்தி**

**பன்னரிய பல பாடு படும்போதும் பரிந்தெந்தாய்**

**இன்னதென அறிகில்லார் தாம்செய்வதிவர் பிழையை**

**மன்னியும் என்றெழிற் கனிவாய் மலர்ந்தார் நம் அருள் வள்ளல்**

இது உண்மை நிலையை எடுத்துரைக்கும் அற்புதமான பாடலாகும். தமக்குத் துன்பம் செய்தவர்களுக்கும் இயேசு மன்னிப்பை அருளினார். இக்கொள்கையை எல்லோரும் செயல்படுத்தவேண்டும்.

## முடிவுரை

அறவியல் பெட்டகமாய் சமுதாய மக்களுக்கு வழி காட்டியாக திருக்குறள், திருவிவிலியமும் திகழ்கிறது. நேர்மையாகவும், நீதியைப் பின்பற்றி வாழும் மக்களிடம் இறைவன் அன்பு கூறுகிறார். அறமற்ற செயல்களை ஒழித்தால் மனித நேயம் மலரும் என்று இரு நூல்களும் அறவியலை எடுத்துரைக்கின்றது.

## துணை நின்ற நூல்கள்

1. திருக்குறள் எளிய உரை, சாரதா பதிப்பகம், சென்னை
2. சரோஜினி பாக்கியமுத்து விவிலியமும் தமிழும் ஸ்டெட் பிரிஸ்ட் பிரஸ், சென்னை
3. திருக்குறளில் கிறிஸ்தவ அறம் இராணி பிரகாஷ் சௌந்தரா பதிப்பகம், அரக்கோணம்.